‘திராவிட மாடல்’ அரசின் வியத்தகு சாதனைத் திட்டங்களால்

தி.மு.கழகக் கூட்டணி வரலாற்றுச் சிறப்புமிக்க வெற்றி பெறும்!

‘தி வீக்’ ஆங்கில வார இதழுக்கு - முதல்வர் மு.க.ஸ்டாலின் சிறப்புப் பேட்டி!

சென்னை, ஏப்.20-

‘தி வீக்’ ஆங்கில வார இதழுக்கு கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அளித்துள்ள சிறப்புப் பேட்டியில் “திராவிட மாடல்” அரசின் வியத்தகு சாதனைத் திட்டங்களால் தி.மு.கழகக் கூட்டணி வரலாற்றுச் சிறப்புமிக்க வெற்றியைப் பெறும்” என்று உறுதி படக் கூறியுள்ளார்.

இதுகுறித்து ‘தி வீக்’ சென்னை பதிப்பின் தலைமைச் செய்தியாளர் லட்சுமி சுப்பிரமணியனுக்கு அளித்த பேட்டி வருமாறு:-

செய்தியாளர் : *நீங்கள் பல சட்டமன்றத் தேர்தல்களைப் பார்த்திருக்கிறீர்கள். இந்தத் தேர்தலை எப்படிப் பார்க்கிறீர்கள்? எதிர்க்கட்சிக் கூட்டணி வலுவாக இருப்பதால், இந்தத் தேர்தலை மிகவும் முக்கியமானதாகவும், சவாலானதாகவும் கருதுகிறீர்களா?*

முதல்வர் மு.க.ஸ்டாலின்: நீங்கள் சொல்லும் எதிர்க்கட்சிக் கூட்டணி, தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியால் ஏற்கெனவே தோற்கடிக்கப்பட்ட கூட்டணிதான்; தமிழ்நாட்டு மக்களால் புறக்கணிக்கப்பட்ட கூட்டணிதான்.

திராவிட மாடல் அரசின் வியத்தகுச் சாதனைத் திட்டங்களால் தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொரு குடும்பமும் பயனடைந்துள்ளது. தமிழ்நாட்டு மக்கள் தி.மு.க. கூட்டணிப் பக்கம் இருக்கிறார்கள். எனவே, இந்தச் சட்டமன்றத் தேர்தலானது வரலாற்றுச் சிறப்புமிக்க வெற்றியை தி.மு.க.விற்குப் பெற்றுத் தரக் கூடிய தேர்தலாக நிச்சயம் இருக்கும்.

செய்தியாளர் : *உங்களின் எண்ணற்ற கொள்கைகள் மற்றும் சமூகநலத் திட்டங்களில், தமிழ்நாட்டிற்கு நீங்கள் ஆற்றிய மிக முக்கியமான பங்களிப்பு எது என்று கூறுவீர்கள்?*

முதல்வர் மு.க.ஸ்டாலின்: ஐந்தாண்டுத் திராவிட மாடல் ஆட்சியில் விடியல் பயணம் திட்டம் தொடங்கி, மகளிர் உரிமைத் தொகை, புதுமைப் பெண், தமிழ்ப் புதல்வன், நான் முதல்வன், காலை உணவுத் திட்டம், தாயுமானவர் திட்டம், அன்புக் கரங்கள் திட்டம், அன்புச்சோலை திட்டம், கலைஞர் கனவு இல்லம், அரசு ஊழியர்களுக்கு உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியம், 2 லட்சம் விவசாயிகளுக்கு இலவச மின் இணைப்பு என நிறைய திட்டங்களை நிறைவேற்றி உள்ளோம்.

அனைத்துமே சமூக முன்னேற்றத்திற்கான முக்கியமான திட்டங்கள் என்றாலும், இரண்டு திட்டங்கள் மிக முக்கியமான, மிக மிக அவசியமான திட்டமாக நினைக்கிறேன்.

பல மாநிலங்கள் வியந்து பாராட்டும் மகளிர் உரிமைத்தொகை!

ஒன்று, கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம். குடும்பத்திற்காக எந்தவித எதிர்பார்ப்புமின்றி, உழைப்பிற்கு அங்கீகாரம் கூட இன்றி உழைத்துக்கொண்டே இருக்கும் நம் இல்லத்தரசிகளுக்கு அரசின் சார்பில் அங்கீகாரம் அளிக்க வேண்டும் என்று நினைத்து நாங்கள் கொண்டு வந்த இந்தத் திட்டம் மகளிர் முன்னேற்றத்திற்கு வித்திட்டுள்ளது. இந்தத் திட்டத்தை நாங்கள் அறிவித்தபோது, “இது எப்படிச் சாத்தியமாகும். அவ்வளவு தொகையை எப்படி கொடுக்க முடியும்?” எனப் பேசிய அரசியல் எதிரிகளே கூட, இப்போது சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டுள்ள மகளிர் உரிமைத் தொகைத் திட்டத்தைக் கண்டு வியந்து, அவர்கள் மாநிலங்களில் செயல்படுத்தும் நிலையை உருவாக்கி உள்ளோம்.

இது பெண்களின் உரிமையை சுயமரியாதையைக் காக்கும் திட்டம் என்பதாலேயே மகளிர் உரிமைத் திட்டம் எனப் பெயரிட்டோம். 1.31 கோடி குடும்பத் தலைவிகள் இன்று இதனால் பயன் பெற்று வருகின்றனர். மேலும் அடுத்து அமையும் திராவிட மாடல் 2.0 ஆட்சியில் இத்தொகையை ரூ.2000 ஆக உயர்த்த உள்ளோம். மற்றொரு முக்கியமான திட்டம் பள்ளிக் குழந்தைகளின் பசியாற்றும் காலை உணவுத் திட்டம். தனிப்பட்ட முறையில் இது என் மனதிற்கு நெருக்கமான திட்டமும் கூட. இந்தத் திட்டத்திற்கான நிதி மற்ற திட்டங்களை ஒப்பிடும்போது குறைவுதான். ஆனால் அதன் பலன் அளவிட முடியாதது.

ELECTIONS: WEST BENGAL
WILL DELETIONS ERODE TRINAMOOL'S MARGINS?
MIDDLE EAST CONFLICT
IRAN WANTS TO KEEP FIGHTING
JOURNALISM WITH A HUMAN TOUCH | www.theweek.in | TheWeekMag | TheWeekLive | ₹80
THE WEEK
APRIL 26, 2026
WEALTH WATCH
HOW LATECOMERS SHOULD INVEST
MEDICINE BEYOND BORDERS
WHEN ALZHEIMER'S COMES HOME
TAMIL NADU ELECTIONS
THE FIGHT IS ON
DMK-AIADMK bipolarity challenged by Vijay and Seeman in a four-cornered race
EXCLUSIVE INTERVIEW
M.K. STALIN
Our Dravidian model will help us retain power

குடும்பச் சூழ்நிலை காரணமாக பல லட்சம் குழந்தைகள் காலை உணவு சாப்பிடாமல் வெறும் வயிற்றில் பள்ளிக்கு வந்ததை இன்று மாற்றியுள்ளோம். ஊட்டச்சத்தான காலை உணவு மூலம் குழந்தைகள் வயிறு நிறைந்து நன்றாகப் படிக்கிறார்கள். படிக்கும் குழந்தைகளுக்கு கல்விப் பசி தான் இருக்க வேண்டுமே தவிர, வயிற்றுப் பசி இருக்கக் கூடாது. சமூக நலத்திட்டங்களில் முக்கிய மான திட்டம் இது. அடுத்து அமையும் ஆட்சியில் 8ஆம் வகுப்பு வரை இதை விரிவுபடுத்த உள்ளோம்.

பசுத்தோல் போர்த்தி பாசிசத்தை நுழைக்கும் பா.ஜ.க.!

செய்தியாளர் : *இந்த 2026 தேர்தலை, தேர்தல் தேதி அறிவிக்கும் முன்பிருந்தே தமிழ்நாடு வெர்சஸ் டெல்லி என்று மீண்டும் மீண்டும் சொல்லி வருகிறீர்கள். ஆனால் இந்தத் தேர்தல் சட்டமன்றத்திற்கான தேர்தல். மாநிலத்தை யார் ஆள வேண்டும், முதலமைச்சர் யார் என்பதற்கான தேர்தல். அப்படியிருக்க, உங்களின் இந்த தமிழ்நாடு வெர்சஸ் டெல்லி என்ற தர்க்கம் மக்கள் மத்தியில் எடுபடுமா?*

முதல்வர் மு.க.ஸ்டாலின்: ‘ஒரே நாடு; ஒரே மதம்’ – ‘ஒரே நாடு; ஒரே மொழி’ – ‘ஒரே நாடு; ஒரே தேர்தல்’ என இந்தியாவின் பன்மைத்துவத்தைச் சிதைத்து, மாநிலங்களின் உரிமைகளைப் பறித்து, ஒற்றைச் சர்வாதிகார ஆட்சியை நிறுவ டெல்லி முயன்று வருகிறது. தமிழ்நாட்டுக்கென ஒரு முத்திரைத் திட்டத்தைக் கூட நிறைவேற்றாமல் வஞ்சித்து வரும் பா.ஜ.க., அடிமை அ.தி.மு.க.வைத் துணைக்கு அழைத்துக் கொண்டு, NDA ஆட்சி என்று தமிழ்நாட்டுக்குள் நுழைய முயற்சிக்கிறது.

தமிழ்நாட்டின் நிதி உரிமை, மொழி உரிமை, கல்வி உரிமை, பண்பாட்டு உரிமை, அரசியல் உரிமை என அனைத்தின் மீதான தாக்குதலைத் தொடர்ந்து நடத்தி வரும் பா.ஜ.க., பசுத்தோல் போர்த்தி பாசிசத்தை நுழைக்க வருவதால்தான், இந்தத் தேர்தல் தமிழ்நாடு Vs டெல்லி என்கிறோம். தமிழர்களின் பண்பாடா – பா.ஜ.க.வின் பாசிசமா என்ற இந்தப் போரில், தமிழ்நாடு போராடும்! தமிழ்நாடே வெல்லும்!

தரம் தாழ்ந்து தனி நபர் தாக்குதல்களில் ஈடுபடும் எதிர்க்கட்சிகள்!

செய்தியாளர் : *இந்த ஐந்து ஆண்டுகளில் செய்த சாதனைகளைச் சொல்லி தேர்தலைச் சந்திக்கிறது தி.மு.க. கூட்டணி. ஆனால் எந்தவொரு அரசாக இருந்தாலும், ஐந்து ஆண்டு ஆட்சிக்குப் பிறகு மக்கள் மத்தியில் ஒரு அதிருப்தி இருக்கும். உங்கள் அரசும் அதற்கு விதிவிலக்கு அல்ல. எதிர்க்கட்சியான அ.தி.மு.க இதைச் சொல்லித் தான் வாக்கு கேட்கிறது. இதைத் தேர்தல் களத்தில் எப்படி எதிர்கொள்ளப் போகிறது தி.மு.க.?*

முதல்வர் மு.க.ஸ்டாலின்: ஐந்தாண்டுக் காலத் திராவிட மாடல் ஆட்சியில், ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஏதாவது ஒரு திட்டத்தின்கீழ் நேரடிப் பணப்பயனை வழங்கி, அவர்களது வாழ்க்கைத்தரத்தைப் பொருளாதார ரீதியாகத் தலைநிமிர வைத்துள்ளோம். முதன்முறையாக சென்னையைக் கடந்து எல்லா மாவட்டங்களிலும் தொழிற்சாலைகளை உருவாக்க வேண்டும் என்ற செயல்திட்டத்தின்கீழ் ஆட்சி செய்துள்ளோம்.

இதனால், நொடிந்து கிடந்த தமிழ்நாட்டின் பொருளாதாரத்தைச் சீர்படுத்தி, இன்று 11.19% பொருளாதார வளர்ச்சி விகிதத்துடன் No.1 மாநிலமாக உயர்த்திக் காட்டியுள்ளோம். ஆகவே, எங்கள் ஆட்சிக்கு ஆதரவு அலைதான் வீசுகிறது என்பதை நான் செல்லும் இடமெங்கும் பார்க்கிறேன். தி.மு.க. அரசுக்கான மக்களின் வரவேற்பைப் பார்த்து, நாங்கள் வழங்கியுள்ள நல்லாட்சியை – வெளிப்படையான நிர்வாகத்தை விமர்சிக்க முடியாத எதிர்க்கட்சியினர், தரம் தாழ்ந்து தனிநபர் தாக்குதல்களில் ஈடுபடுகிறார்கள்; அவதூறுகளைப் பரப்புகிறார்கள். அதனை மக்கள் புறக்கணிப்பது போல், அவர்களை இந்த முறையும் தோற்கடிப்பார்கள்.

எதிர்த்தவர்களையும் விமர்சித்தவர்களையும் அரவணைத்துக் கொள்வது ஏன்?

செய்தியாளர் : *எத்தனையோ அம்சங்களில் சித்தாந்த ரீதியாக உங்களை எதிர்த்து களமாடிய ஆளுநர் ரவி அவர்களை அவர் மேற்கு வங்கத்துக்கு மாற்றப்பட்டபோது நேரில் சென்று சந்தித்து வழியனுப்பி வைத்தீர்கள். உங்களை எதிர்த்தே அரசியல் செய்த ஓ. பன்னீர்செல்வத்தை உங்கள் கட்சியில் இணைத்துக் கொண்டீர்கள். உங்களை எப்போதும் விமர்சித்த எச். ராஜாவை மருத்துவமனையில் சென்று நலம் விசாரித்தீர்கள். இப்படி எதிர்த்தவர்களையும், விமர்சித்தவர்களையும் அரவணைத்துக் கொள்வது ஏன்? இது தமிழ்நாட்டு அரசியலுக்குப் பொருத்தமானதாக இருக்குமா?*

முதல்வர் மு.க.ஸ்டாலின்: நான் யாரையும் எதிரியாகப் பார்ப்பது இல்லை. ஒருவரின் அரசியல் நிலைப்பாட்டை நாம் எதிர்க்கிறோம், ஆதரிக்கிறோம் என்பது வேறு. ஆனால் தனி மனிதனாக அனைவரையும் அரவணைத்துப்போகவே விரும்புகிறேன். தமிழ்நாட்டு மக்களும் இந்த அரசியல் பண்பாட்டைத்தான் விரும்புவார்கள். அரவணைப்பு அரசியல் – நல்லிணக்கம் – சகோதரத்துவம் என்பதுதான் தமிழ்நாட்டு மக்களின் தனிக்குணம். அதைத்தான் நான் வெளிப்படுத்துகிறேன். வெறுப்பரசியலுக்குத் தமிழ்நாட்டில் ஒருபோதும் இடமில்லை.

செய்தியாளர் : *ஆளுநர் ரவி அவர்கள் மேற்கு வங்கத்திற்கு மாற்றப்பட்டு தமிழ்நாட்டிற்கு ஒரு பொறுப்பு ஆளுநர் நியமிக்கப்பட்டிருக்கிறார். ரவி அவர்கள் ஆளுநராக இருந்தவரை, அவர் மத்திய பாரதீய ஜனதா கட்சியின் ஏஜென்டாகவே செயல்படுகிறார் என்று சொன்னவர் நீங்கள். இப்போது பொறுப்பு ஆளுநர் நியமனம் என்பது தமிழ்நாட்டின் மாண்பைக் குறைப்பதாக இல்லையா?*

முதல்வர் மு.க.ஸ்டாலின்: “ஆட்டுக்குத் தாடியும் நாட்டுக்கு கவர்னரும் எதற்கு?” என்று பேரறிஞர் அண்ணா சொன்னதுதான் எங்களது கொள்கை. அதேசமயம், அந்தப் பதவி இருக்கும்வரை, அதற்குரிய மதிப்பை நாங்கள் வழங்கி வருகிறோம். எல்லா அரசமைப்புச் சட்டப் பதவிகளையும் அரசியல்மயமாகவோ – காவிமயமாகவோ ஆக்கியிருக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசு, ஆளுநர் பதவியையும் முன்னெப்போதையும்விட காவிமயமாக்கி, எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களில் இணை அரசாங்கம் நடத்த முயற்சிக்கிறது. இதற்கு முழுநேர ஆளுநர் – பொறுப்பு ஆளுநர் என்பது எல்லாம் பா.ஜ.க.வுக்கு ஒன்றுதான்.

தி.மு.கழகத்தை இந்தியாவே உற்றுநோக்குகிறது!

செய்தியாளர் : *கட்சிகளுக்கு ஒரு சித்தாந்தம் இல்லை என்று மக்கள் கருதுவதால், அவர்கள் இப்போது வலிமையான தலைவர்களை அதிகம் விரும்புகின்றனர் என்ற நம்பிக்கையை நீங்கள் எப்படிப் பார்க்கிறீர்கள்?*

முதல்வர் மு.க.ஸ்டாலின்: நீங்கள் சொல்வதுபோல், கருத்தியலற்ற இயக்கங்கள் என்பது எதிர்க்கூட்டணியில்தான் இருக்கிறார்கள். சந்தர்ப்பவாதத்திற்காகவும் சுயநலத்துக்காகவும் உருவாக்கப்படும் கட்சிகள் காலப்போக்கில் என்னவாகும் என்பதைத்தான் வரலாறு நமக்கு காட்டிக் கொண்டிருக்கிறது.

ஆனால், வலிமையான கருத்தியல்கள்தான் நிலைத்து நிற்கும் என்பதற்கு அடையாளமாக, நூற்றாண்டைக் கண்ட திராவிட இயக்கத்தின் தலைமகனாக, பவள விழா கண்டுள்ள தி.மு.க.வை மக்கள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அதனால்தான், எந்தவொரு விவகாரத்திலும் தி.மு.க. என்ன சொல்கிறது என்று இந்திய நாடே உற்றுநோக்குகிறது.

செய்தியாளர் : *அ.தி.மு.க. கூட்டணி இந்தத் தேர்தலில் உங்களுக்குச் சவாலாக இருக்கும் என்று நீங்கள் நினைக்கிறீர்களா?*

முதல்வர் மு.க.ஸ்டாலின்: தேர்தலுக்கான பரப்புரை பாதி முடிந்துவிட்டது. இன்னமும் அது என்ன கூட்டணி என்றே முடிவாக வில்லை. என்.டி.ஏ. கூட்டணி என்று பா.ஜ.க. சொல்கிறது. டி.டி.வி தினகரன் – அன்புமணி ஜி.கே.வாசன் உள்ளிட்டோரும் அதையே தான் சொல்கிறார்கள். பழனிசாமி மட்டும்தான் அ.தி.மு.க. கூட்டணி என்கிறார். எனவே, கூட்டணிச் சவால் இருப்பது உண்மைதான்; அது எதிரணிக்குள்தான் இருக்கிறது.

ஊர் முழுக்க ‘இல்லத்தரசி’ கூப்பன் பேச்சுத்தான்!

செய்தியாளர் : *தேர்தல் அறிக்கையை சூப்பர் ஸ்டார் எனக் கூறுகிறீர்கள். எதனால்? ரூ.8000 இல்லத்தரசி கூப்பன் திட்டத்தைச் செயல்படுத்த முடியுமா?*

முதல்வர் மு.க.ஸ்டாலின்: எப்போதும் செய்வதைத்தான் சொல்வோம், சொல்வதை செய்து முடிப்போம். அதனால்தான் மக்கள் எங்கள் மீதும், எங்களது தேர்தல் அறிக்கை மீதும், மிகுந்த நம்பிக்கை வைத்துள்ளனர். எதிர்க்கட்சிகள் எல்லாம் கூட, என்னென்னவோ அறிக்கை விட்டனர். ஆனால், மக்கள் அவற்றை எல்லாம் கண்டுகொள்ளவில்லை. காரணம், அவர்கள் சொல்வார்களே தவிர செய்ய மாட்டார்கள்.



COVER STORY
TAMIL NADU ELECTIONS

INTERVIEW

M.K. STALIN,
TAMIL NADU CHIEF MINISTER

The battle is between Tamil culture and BJP's fascism

BY LAKSHMI SUBRAMANIAN

30 | THE WEEK • APRIL 26, 2026

COVER STORY
TAMIL NADU ELECTIONS

Stalin interacts with Chennai Metro Rail passengers on April 10

achieve socioeconomic empowerment. For the first time, we have governed with a plan to create factories in all districts, moving beyond just Chennai. Because of this, we have repaired Tamil Nadu's limping economy, and raised it as the number one state with a thumping 11.19 per cent economic growth rate. Therefore, I see a wave of support for our rule everywhere I go. Unable to criticise our good governance and transparent administration, the opposition has stooped to personal attacks and slanders. This time, too, people will ensure that they are defeated.

Q When Governor R.N. Ravi was transferred to West Bengal, you met him and saw him off, even though he had opposed you ideologically. You welcomed O. Panneerselvam, who was politically against you, into your side. You visited H. Raja, your constant critic, in the hospital to inquire about his health. These gestures are unusual in Tamil Nadu politics, and it might not help you politically.

I do not see anyone as an enemy. We may support or oppose a person's political stance, but as a human being, I want to embrace everyone. The people of Tamil Nadu also prefer this political culture. Politics of embrace, harmony and brotherhood is the unique character of the Tamil people. That is what I express. There is no place for the politics of hate in Tamil Nadu.

Q Doesn't the appointment of an acting governor after Ravi's transfer diminish Tamil Nadu's dignity?

Our policy is what our leader C.N. Annadurai said, "Why a beard for a goat, and why a governor for a nation?" However, as long as that position exists, we provide the appropriate respect. The BJP government has politicised and saffronised all constitutional positions, making the governor's office more saffron than ever to run a parallel government in opposition-ruled states. For the BJP, there is no difference between a full-time governor and an acting governor.

Q It is believed that people tend to lean towards strong leaders when political parties are deprived of ideologies. What do you have to say?

As you say, movements without ideology are only in the opposition coalition. History shows us what happens to parties created for opportunism and selfishness over time. But as a symbol of how strong ideologies endure, the people are looking at the DMK, the son of the century-old dravidian movement, which is celebrating its diamond jubilee. That is why the entire country watches closely to see what the DMK says on any issue.

Q You say the AIADMK front is not a strong alliance. But it has its own strengths and acceptance among the people. Don't you think the AIADMK alliance will be a challenge for you?

Half of the poll campaign is already over. Even now, it hasn't been decided what that alliance actually is. The BJP says it is the National Democratic Alliance. Leaders like T.T.V. Dhinakaran, Anbumani [Ramadoss] and G.K. Vasan say the same. Only [Edappadi] Palaniswami says it is the AIADMK alliance. Therefore, an alliance challenge does exist—but that challenge is internal to the opposition.

Q You are calling your election manifesto a superstar. Why? And can the ₹8,000 purchase coupon scheme for housewives be implemented?

We do what we say. That is why the people have great faith in us and our election manifesto. The opposition parties also released manifestos, but the people didn't take notice. The reason is that they only talk and do not act. As soon as the DMK released its manifesto, the housewife coupon scheme became the talk of the town. You ask how we will achieve this. People asked the same when we announced the women's direct cash benefit transfer scheme. But we implemented it successfully. Today, that scheme has spread across India. Similarly, this housewife coupon scheme will also definitely be fulfilled. ●

32 | THE WEEK • APRIL 26, 2026

எப்போது தி.மு.க. தேர்தல் அறிக்கை வெளியிட்டோமோ, அப்போதே ஊர் முழுக்க இல்லத்தரசி கூப்பன் தான் ஒரே பேச்சு.

இந்தத் திட்டத்தை எவ்வாறு செய்து முடிப்பீர்கள் என்று கேட்கிறீர்கள். மகளிர் உரிமைத் தொகைத் திட்டம் அறிவித்த போதும் இதையே தான் கேட்டார்கள். ஆனால் வெற்றிகரமாகச் செயல்படுத்திக் காட்டினோம். இன்று இந்தியா முழுக்க அந்தத் திட்டம் பரவியுள்ளது. அதேபோல தான் இல்லத்தரசி திட்டமும் நிச்சயம் நிறைவேற்றப்படும்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பேட்டியளித்துள்ளார்.